**ASSOCIATION OF UNIVERSITY TEACHERS (Regd.) TAMIL NADU**

**பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் (பதிவு) தமிழ்நாடு**

# 134, (Old No.68), Rama Lane, Nungambakkam, Chennai - 600 034. ☎ 2823 1797
E-mail : aut.generalsecretary@gmail.com, www.aut.org.in

President : **Dr. P. SANTHI,** Faculty of Mathematics,C.K.N. College for Women, Cuddalore - 607 001. Mob: 9443016590
General Secretary : **Dr. N. SHETTU,** Faculty of Zoology, Pachaiyappa's College, Chennai - 600 030. Mob : 9444350860
Treasurer : **Dr. S. SENTHIL KUMAR,** Faculty of Tamil, T.U.K. Arts College, Thanjavur - 613 002. Mob : 9443177338

19-01-2019

**பத்திரிக்கைச் செய்தி**

**திருச்சி காட்டூர் உருமு தனலட்சுமி கல்லூரிச் செயலர், திரு. கல்கி இராமகிருஷ்ணன்** அவர்கள், 2017 ஆகஸ்டில் கல்லூரிச் செயலராகப் பொறுப்பேற்ற நாளிலிருந்து, ஏயுடி ஆசிரியர்களைக் **குறிவைத்துத்** தொடர் பழிவாங்கும் போக்கினை மேற்கொண்டு வருவது குறித்துக் கடந்த 22-12-2018ல் திருச்சியில் கூடிய **ஏயுடி மத்தியச்** செயற்குழு, விவாதித்துக், கீழ்க்காணும்

1. 05-01-2019 **சனிக்கிழமை, மாலை 4 மணி , 'கண்டன ஆர்ப்பாட்டம்'**
2. 19-01-2019 **சனிக்கிழமை 'ஒரு நாள் பட்டினிப் போராட்டம்'**
3. 02-02-2019 **சனிக்கிழமை மாலை 'பேரணி'**

ஆகிய மாநில அளவிலான மூன்று கட்ட போராட்டங்களைத், **திருச்சியில்** நடத்துவதென தீர்மானித்ததன் அடிப்படையில், இரண்டாம் கட்ட போராட்டமான,

**'உண்ணாவிரதப் போராட்டம்' திருச்சியில் இன்று 19-01-2019 சனிக்கிழமை**

**ஏயுடி யின் மாநிலத்தலைவர் முனைவர் P. சாந்தி** அவர்களின் தலைமையில், **பொதுச் செயலர்** முனைவர் **என்.சேட்டு** மற்றும் **பொருளாளர் முனைவர் S. செந்தில்குமார்** ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. ஏயுடி **திருச்சி மண்டலத் தலைவர் முனைவர் ஆர்.சாம்பசிவம், மண்டலச்செயலர் பேரா.க.ராஜா** மற்றும் **பொருளாளர் முனைவர் என்.பி.எம்.சாதிக்** அவர்கள் ஒருங்கிணைத்தனர். 35 பெண் ஆசிரியைகள் உள்ளிட்ட 250க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், தமிழகத்தின் பல்வேறு அரசு உதவிபெறும் கல்லூரிகளிலிருந்து பங்கு பெற்றனர்.

**ஏன் இந்தப் போராட்டம்?**

- **திருச்சி காட்டூர் உருமு தனலட்சுமி கல்லூரிச் செயலர், திரு. கல்கி இராமகிருஷ்ணன்** அவர்கள், **'கண்ணன்'** என்ற வெளிநபரை, **'கல்லூரி நிர்வாகக் குழு உறுப்பினர்'** என்று பொய்யாக அறிமுகபடுத்தி, ஏயுடி ஆசிரியர்களை, பலர் முன்னிலையில் அவமானப்படுத்தியும், **'விசாரணை'** என்ற பெயரில், இரவு வெகுநேரம் வரையில் 'மனயியல்' ரீதியாகத் துன்புறுத்தியும், **உச்சகட்டமாக,** வேதியியல்துறை ஏயுடி பெண்உறுப்பினர் அவர்களுக்குப் **'பாலியல்'** மற்றும் **'வன்கொடுமை'** துன்புறுத்தலுக்கு ஆளாக்கியதன் விளைவாக, அவர் **'தற்கொலைக்கு'** முயன்று, மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று, அதன் மீதான வழக்குகள் 'நீதிமன்றத்திலும்' தேசிய எஸ்சி/எஸ்டி ஆணையத்தின் முன்பும் தற்போது உள்ளன. இதன் மீதான **திருவெறும்பூர் காவல்நிலைய விசாரணை 'முறையாக' நடத்தப்பெறவில்லை' என்று திருச்சி நீதிமன்றம் கடந்த 2018 டிசம்பார் 4ஆம் தேதி தீர்ப்பளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.**
- **கண்ணன்** மீது இதுகுறித்த திருவெறும்பூர் காவல்நிலையத்தில் பதியப்பட்ட **'முதல் தகவல் அறிக்கை'** க்குப்பிறகு, இன்றுவரை **கண்ணன் தலைமறைவாக உள்ளார்.**
- தேசிய எஸ்சி/எஸ்டி ஆணையத்தின் ஆணைப்படி, திருச்சி கல்லூரிக் கல்வி இணை இயக்குநரின் **'விசாரணை'** க்கு கண்ணனை, கல்லூரிச் செயலர் **கல்கி இராமகிருஷ்ணன்** ஆஜர்படுத்தாமல், அவரின் **'முகவரி, கைபேசி எண் தன்னிடம் இல்லையென்றும்'**, கல்லூரி முதல்வர், **'கண்ணனை, காவலர்தான் அழைத்து வந்ததாகவும், தனக்கு எதுவும் தெரியாதென்றும்'** கூறுகின்றனர்.

- சட்டம் மற்றும் அரசு விதிகளுக்கு எதிராக, '**வெளிநபரை**' உருமு தனலட்சுமிக் கல்லூரிச் செயலர், திரு. கல்கி இராமகிருஷ்ணன் மற்றும் கல்லூரி முதல்வர் ' **உபயோகப்படுத்தி**' ஏயுடி ஆசிரியர்களை, உடல் மற்றும் மனயியல் ரீதியாகத் துன்புறுத்திப், பலரை, ஏயுடி யிலிருந்து வெளிவரவழைத்து, 42 உறுப்பினர்கள் கொண்ட ஏயுடி கிளையை, இன்று 16 ஆகச் சிதைத்து, 'மாற்று சங்க'த்தினைத் தோற்றுவித்துள்ளனர்.
- **உருமு தனலட்சுமி கல்லூரிச் செயலர், திரு. கல்கி இராமகிருஷ்ணன்** மற்றும் **'கண்ணன்' என்கிற வெளிநபர், ஏயுடி ஆசிரியர்களை அவமானப்படுத்திய, அசிங்கப்படுத்திய வழி 'முறைகள்'** :
    - ➢ **'மாணவர் தேர்ச்சி மறு ஆய்வு'** **(Result Review)** என்ற பெயரில், ஆசிரியர்களைத் தனது அறைக்கு வரவழைத்து '**ஆபாச**' வார்த்தைகளில் பலர் முன்னிலையில் அர்ச்சனை செய்வது;
    - ➢ **ஏயுடி** ஆசிரியர்களைத் '**தனியாக**' அழைத்து மிரட்டுவது;
    - ➢ புத்தொளி/புத்தாக்க பயிற்சிக்குச் செல்லும் ஆசிரியர்களை, வேண்டுமென்றே, இரவு வரை 'காக்க' வைத்து, மிகக் காலதாமதமாக 'விடுவிப்பு ஆணையை வழங்குவது;
    - ➢ ஏயுடி ஆசிரியர்களின் ' காலமுறை ஆண்டு ஊதிய உயர்வுக்காகத் '**தன் மீது எந்தப் புகாரும் நிலுவையில் இல்லை**' என்று எழுதித் தர நிர்ப்பந்திப்பது;
    - ➢ அலுவல் நேரத்திற்குப் பிறகு, துறைத்தலைவர்கள் கூட்டத்தினை நடத்துவது; அதில், ஏயுடி ஆசிரியர்கள் மீது, 'பொய்ப்புகார்' பெறுவது; மாணவர்களிடம் நேரிடையாக, ஆசிரியர்களைப் பற்றி 'பொய்ப்புகார்களைப்' பெற்று, அதனை வைத்து, சட்டத்தில் இல்லாத, '**ஒழுங்கு நடவடிக்கைக் குழு**' **(Staff Disciplinary Committee)** முன்பாக ஆசிரியர்களை 'ஆஜர்' படுத்தி, பலர் முன்னிலையில் அவமானப்படுத்துவது;
    - ➢ முன்னறிவிப்பின்றி துறைக்கூட்டத்தினை நடத்துவது; வர இயலாதவர்களை மிரட்டுவது
    - ➢ கல்லூரி தொடங்கும் முன், ஒருமணி நேரம், முறைவாரியாக ஆசிரியர்களை கல்லூரி வாயிலில், '**காவலர்களுடன்**' சேர்ந்து நிற்க வற்புறுத்துவது;
    - ➢ கல்லூரி '**பொன்விழா**' விற்கு, ஒவ்வொரு துறையும் ரூ.4 லட்சம் வசூல் செய்ய வற்புறுத்துவது;
    - ➢ மாணவர்களிடையே 'கோஷ்டி' மோதலை உருவாக்கி, 'வேண்டுமென்றே 'கலவரத்தினைத்' தூண்டி, அதற்கு ஆசிரியர்கள் மீது பழியைப் போட்டு, ஆசிரியர்களுக்கு எதிராக மாணவர்களைத் தூண்டிவிடுவது; [ஐந்திற்கும் மேற்பட்ட முறை, காவல்துறையினர் கல்லூரி வளாகத்துனுள் இதுவரை வந்துள்ளனர்
    - ➢ நிர்ணயிக்கப்பட்ட கல்விக் கட்டணத்தைவிட அதிகமாக வசூலிப்பதும், 'வைப்புதொகை' யினைத் திருப்பித் தராமலும், மாணவர்களிடம் 'டீசி கொடுத்துவிடுவேன்' என்று மிரட்டுவது;பெற்றோர்-ஆசிரியர் சங்கக் கூட்டத்திற்குப் பெற்றோர்களை வரவழைத்து அவர்களிடமும் 'மிரட்டல்' தொனியில் பேசுவது;
    - ➢ தனக்குப் பிடிக்காத வேதியியல்துறைப் பெண் பேராசிரியையின் முனைவர் பட்ட முன்தேர்வினைக், கல்லூரியில் நடத்த விடாமல், அப்பேராசிரியையை காவலர்களை வைத்து மிரட்டியும், அத்தேர்வு பற்றிய அறிக்கையினை பல்கலைக்கழக தேர்வு நெறியாளருக்கு அனுப்பாமலும் பழிவாங்கி வருவது;
    - ➢ பணியிலிருக்கும்போது மரணமடைந்த ஆய்வக உதவியாளர் மகனுக்குக் 'கருணை' அடிப்படையில்' வழங்கப்பட்டிருக்க வேண்டிய பணியினை இன்றுவரை வழங்காமல், பெறவேண்டியதைப் பெற்று, மற்றவர்களுக்குப் பணி நியமனம் செய்யப்பட்டிருப்பது;

எனப் பட்டியியல் நீள்கிறது.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாகக், கடந்த 12-11-2018ல், திருச்சி மண்டல ஏயுடி கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, **கல்லூரிச் செயலர், திரு. கல்கி இராமகிருஷ்ணன்** அவர்களுக்கு, 14-11-2018 அன்று எழுத்துப்பூர்வமாக முன்னறிவித்துவிட்டு, 22-11-2018 அன்று மதியம் 1 மணி முதல் மாலை 4 மணிவரை **கல்லூரிச் செயலர் அறைமுன்** காத்திருந்த ஏயுடி ஆசிரியர்கள் 15 பேர் மீது, [உருமு தனலட்சுமி - 7; தேசியக்கல்லூரி - 3 (ஓய்வு -1); உறுப்புக்கல்லூரி - 5] 29-11-2018 அன்று, கல்கி இராமகிருஷ்ணன் 'பொய்ப்புகாரினை' அளித்து, 01-12-2018 அன்று வழக்கும், முதல் தகவல் அறிக்கை' யும் திருவெறும்பூர் காவல்நிலையம் உடனடியாக மின்னல் வேகத்தில் பதிவு

செய்து, 02-12-2018 அன்று, மேற்காண் 15 ஏயுடி ஆசிரியர்களையும் போலீசார் தேடிவருவதாக நாளிதழ்களில் செய்தி வெளியிடப்பட்டது.

**உருமு தனலட்சுமி கல்லூரி பேராசிரியர்களின், காலமுறை ஆண்டு ஊதிய உயர்வினை, அவர்களின் பெயர் '*முதல் தகவல் அறிக்கை*' யில் இடம் பெற்றுள்ளதைக் காரணம் காட்டி, கல்லூரிச் செயலர் நிறுத்தி வைத்துள்ளார்.**

வேடிக்கை என்னவென்றால், வேதியியல்துறை பெண் பேராசிரியை, கடந்த ஜனவரி 2018ல், இதே காவல்(மகளிர்)நிலையத்தில், கல்லூரிச் செயலர், திரு. கல்கி இராமகிருஷ்ணன் மீது அளித்திட்ட 'பாலியல் மற்றும் வன்கொடுமை' புகார் மீது, அப்புகாரினைப் பெற்றுக்கொண்டமைக்கான 'இரசீது' மட்டும் வழங்கிவிட்டு, பத்து மாதங்கள் கடந்த பின்னரும், எவ்வித மேல்நடவடிக்கையினையும் இதுவரை இக்காவல்நிலையம் எடுக்கவில்லை என்பதுதான்.

**பெண்பேராசிரியையின் மற்றுமொரு புகாரில், இதே காவல்நிலையம், "புகாரில் உண்மை இல்லை" (Mistake of Facts) என்று நீதிமன்றத்தில் சமர்ப்பித்த (Closure Report) அறிக்கையினை 'நிராகரித்த நீதிமன்றம்" , 'கண்ணன்' என்பவரை அடையாளப்படுத்தி, விசாரணை நடத்தி, எதிர்வரும் ஜனவரி 30ஆம் தேதி விசாரணை அறிக்கையினைச் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.**

**(பெண்) ஆசிரியருக்கு ஒரு அ(நீ)தி! கல்லூரிச் செயலர் கல்கி இராமகிருஷ்ணன் க்கு ஒரு நீதி!**

**திருச்சி காட்டூர் உருமு தனலட்சுமிக் கல்லூரிச் செயலர் கல்கி இராமகிருஷ்ணன் அவர்களின்**

**அதிகாரம்! ஆணவம்! அடக்குமுறை!**

**ஆகியவற்றை கண்டித்து, எதிர்த்து நடைபெறுகின்ற ஏயுடி போரட்டங்களுக்கு ஆதரவு தாரீர்!**

பொ சாந்தி

**P. சாந்தி**
மாநிலத்தலைவர், ஏயுடி
19.1.2019